This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# என்றாவது ஒருநாள்

அவன் நிஜப்பெயர் நாராயணன் இல்லை. அதைப் பற்றி அப்புறம் சொல்லலாம். இப்போது அவன் நாராயணன்.

காலை எழுந்தபோது இன்றைய தினம் வேறு விதமாக அமையப் போகிறது என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

மைலாப்பூர் கோயிலைச் சுற்றியிருக்கும் பற்பல சந்துகளில் ஒரு சந்தில் ஐந்து ஆண்டாக சுண்ணாம்புப் பூச்சைப் பார்த்திராத ஒரு வீட்டு மாடியில் பின்புறத்தில் ஓர் ஆஸ்பெஸ்ட்டாஸ் அவசர அறையில் அவன் குடியிருப்பு.

பத்துக்கு எட்டு அடி அளவு. அதில் அவன் எளிய உடைமைகள். ஒரு தகரப்பெட்டி. தரையில் ஒரு படுக்கை. சுவரில் சில காலண்டர்கள். அறையில் குறுக்கே கொடி கட்டித் தொங்கும் ஒன்றிரண்டு பாண்டு, சட்டைகள். தரையில் கிடக்கும் பத்திரிகைகள், தண்ணீருக்கு ஒரு மண் கூஜா. அதன் மண்டையில் ஒரு தம்ளா.

அறையை விட்டு வெளியே வந்தவுடன் கோவில் தெரியும் மொட்டைமாடி. அங்கிருந்து சிக்கலான மரப்படிகளில் சரிந்து அவனுடன் செல்லலாம்.

அந்த வீட்டில் பற்பல ஓரங்களில் பற்பல தடுப்புகளில் குடியிருக்கும் அவன் போன்ற மற்றவர்கள் காத்திருக்கும் ஒரே பாத்ரூம்.

அதன் வாசலில் தண்ணீர் நூலாக வடிக்கும் குழாய்.

அதில் நீர் பிடித்து முகத்தை நனைத்துக் கொண்டு மிச்சமிருந்த தண்ணீரில் பல் தேய்த்தான்.

குளிப்பது தற்போது இயலாத காரியமாகத் தோன்றியது. நாலு சோப்புப் பெட்டிகள் வரிசையாகக் காத்திருந்தன.

மீண்டும் தன் அறைக்கு வந்து, சட்டை பாண்ட் மாற்றிக்கொண்டு, கைக்காசை ஆராய்ந்தான்.

இரண்டு ரூபாய் சில்லறை.

‘பத்மா’வில் இட்லி காப்பி சாப்பிட்டால் பஸ்சுக்குத்தான் மிஞ்சும். மத்தியானச் சாப்பாட்டிற்கு அல்ல.

சாயங்காலம்தான், அந்த வாரக் கூலி கிடைக்கும். முப்பத்தி ஐந்து ரூபாய். அதுவரை…